Thondamuthur Co-operative Stores

* 245 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the auditor in his Final Audit Special Report for 1962–64 to the District Co-operative Audit Officer, Coimbatore, has pointed out a number of irregularities and misappropriations in the Management of the Thondamuthur Co-operative Stores Limited; and

(b) if so, the details of major irregularities and misappropriations?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) தொண்டாமுத்தூர் கூட்டுறவுப் பண்டகசாலைத் தலைவர் 8–7–1963 முதல் 1–5–1964 வரையுள்ள கால அளவில் கோயம்புத்தூர் மத்திய வங்கியிலிருந்து 11,060 ரூபாய்வரை காசோலைகள், (செக்) மூலமாக எடுத்திருந்தார்கள். ஆனால் எடுக்கப்பட்ட அந்தப் பணம் கூட்டுறவுப் பண்டகசாலையின் ரொக்கப் பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை. இது இறுதித் தணிக்கைபற்றி தணிக்கையாளர் அனுப்பிய அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

*** 246 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொண்டாமுத்தூர் கூட்டுறவு ஸ்டோர்ஸ் ஊழல் சம்பந்தமாக எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் ?

(இ) எத்தனை பேர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது ? அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, (அ) ஒருவரும் கைது செய்யப்படவில்லை.

(இ) தொண்டாமுத்தூர் கூட்டுறவு பண்டகசாலையில் 7–7–1963 முதல் 25–3–1966 வரை பொய்க் கணக்குக் காட்டி ரூ. 10,500-ஐக் கையாடியதாக நான்கு பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது. பின்னர் அந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது.

DR. H. V. HANDE : May I know whether it is a fact that the President of Thondamuthur Co-operative Stores had been withdrawing large sums of money from the District Co-operative Bank even though cash balances remained in the Stores in 1963-64? Has any case been registered against the President and three others in April 1968 for misappropriation and mismanagement and the case withdrawn in July 1968? If it is so, may I know the reasons for withdrawing the case?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு பண்டகசாலையில் ரொக்கப் பணம் கையில் இருக்கும் போது, 10,500 ரூபாய் வகையில் செக் எழுதி வங்கியிலிருந்து பணம்

1970 மார்ச் 6]

பெற்று, அது வாபஸ் வைக்கப்படவில்லை. இந்த வழக்கை வாபஸ் பெறக் காரணம் என்ன என்று கேட்டார்கள். இதற்குக் காரணம் நான் பார்த்த வரையில், மறைந்த முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுடைய தாராள மனப்பான்மையும், யாராக இருந்தாலும், பகைவராக இருந்தாலும், எதிர்க்கட்சியிலே இருந்தாலும் எவராக இருந்தாலும் அவர்களுக்குக்கூட அருள் காட்டுகின்ற கருணை யுள்ளமும், என்பதைத் தவிர வேறு ஒரு காரணமும் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: கருநாகத்தினிடத்திலே கருணை காட்டக்கூடிய . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் வேண்டாம், கருநாகமெல்லாம் வேண்டாம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சாதாரண மக்களாக இருந்தால் அவர்களிடத்திலே கருணை காட்டக்கூடிய அளவிற்கு நிலைமை இல்லை. இப்படி 1963–64-லே மட்டும் பத்தாயிரக்கணக்கான ரூபாய்கள், கண்ணுக்குத் தெரிந்து, இன்னும் கண்ணுக்குத் தெரியாமல் எவ்வளவு என்று சொல்ல முடியாது, அப்படிக் கையாடல் செய்திருக்கக்கூடிய அவர்கள் மீது இது போன்ற வழக்குகளை, கருணை காட்டாது, தொடரவேண்டும். அதே நேரத்தில் கைது செய்யப்படவுமில்லை. வழக்குத் தொடரப்பட்டது என்று சொன்னாலும் பல வருஷங்களாக நீடிக்கும் அளவுக்கு இருக்கிறதே, இப்படி நீடிக்காமல் உடனுக்குடனேயே அந்த வழக்குகளை முடிக்கக்கூடிய அளவுக்கு 'டிரிபியூனல்' கோர்ட்டுகளை ஏற்படுத்தும் அளவுக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள், அது என்னவாயிற்று, இனிமேலாவது உடனடியாகக் கொண்டுவர உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருநாகம் என்றெல்லாம் சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் அதிலே சட்டமன்ற உறுப்பினர் இருக்கின்ற காரணத்தினாலே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கருநாகத்தை விட்டு விட்டார்கள். அவர் கருநாகம் என்று சொன்னார், நான் கருநாகம் வேண்டாமென்று சொன்னேன், அவரும் விட்டு விட்டார்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நண்பரவர்கள், சட்டமன்ற உறுப்பினரைக் குறிப்பிட்டு கருநாகம் என்று சொல்லிய காரணத்தினால், அப்படிப்பட்ட கொடுஞ்சொற்கள் வேண்டாமென்று சொன்னேன். யாராக இருந்தாலும் அப்படிச் சொல்ல வேண்டாமென்று அன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய அளவுக்கு, எனக்கு கருணை உள்ளம் இல்லை. ஆனால் அவர்கள் பாதையிலே, அவர்கள் வழியிலே போக வேண்டுமென்ற கடமையுணர்ச்சி இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள், சம்பந்தப்பட்டவர்கள் மீதுள்ள கிரிமினல் வழக்குகளை அருள்கூர்ந்து மன்னித்துவிட்டார்கள். ஆனால்

தொடர்ந்து, கூட்டுறவு சங்கச் சட்டத்தின் அடிப்படையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நான் எடுத்து வருகிறேன். சம்பந்தப் பட்டவர் எழுதியிருந்தார்கள். அது என்னவென்றால், "அரசாங்கத் துக்கு 23—7—1968-ல் விண்ணப்பித்துக் கொண்டதின்பேரில், காருண்யமுள்ள சர்க்கார், அண்ணா அவர்களின் சர்க்கார், என் மீது நம்பிக்கை வைத்து, மேற்படி வழக்கை வாபஸ் பெற உத்தரவு செய்தார்கள். அதற்கு நான் நன்றியுடையவன் ஆவேன். சங்கத்தின் நிர்வாகத்தைக் குறித்து மீண்டும் நடவடிக்கை எடுத்திருப்ப தாகக் கேள்விப்பட்டு வருந்துகிறேன். சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் பொதுச் சேவை செய்பவன் என்ற முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டாமென்று உத்தரவு இட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்." நான் சொன்னது, கிரிமினல் வழக்குகளை, பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆணைக்கு உட்பட்டுத் திரும்பப் பெற்றிருக்கிறோம். இந்தக் கூட்டுறவுச் சட்டத்தின் அடிப்படையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நான் எடுப்ப தற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

திரு. ஆர். நாகசுந்தரம்: மேற்கூறிய கூட்டுறவு ஸ்டோரின் தலைவராக இத்தனை ஆண்டுகளாக இருந்தவர் யார்? கையாடல் செய்யப்பட்ட பணம் வசூலாகி விட்டதா?

(பதில் இல்லை).

பூலா வட்டி ஊராட்சி கூட்டுறவு பண்ணை

*247 வினா—திரு. இரா. மாணிக்கவாசகம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை தாலுக்கா பூலா வட்டி பஞ்சாயத்திலுள்ள கூட்டுறவு பண்ணையினால் அரசுக்கு ஏற்பட்ட நட்டம் என்ன?

(இ) தனித் தணிக்கை அதிகாரியை நியமித்து இப்பண்ணை யில் கணக்குகளை தணிக்கை செய்யும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, (அ) கோவை தாலூக்கா பூலாவட்டி பஞ்சாயத்திலுள்ள கூட்டுறவு பண்ணையைப் பற்றியது இந்த வினா. இந்தச் சங்கத்தினால் அரசுக்கு நஷ்டம் எதுவும் ஏற்படவில்லை.

(இ) இல்லை. சங்கத்தின் கணக்குகளை தணிக்கை செய்து முடிக்குமாறு கூட்டுறவு தணிக்கை அதிகாரிக்கு உத்தரவிடப் பட்டிருந்தது. தனித் தணிக்கை தேவையில்லை. அரசு இந்தச் சங்கத்திற்கு 45,000 ரூபாய் கொடுத்திருக்கிறது. அதிலேயும் 20,000 ரூபாய் வரவேண்டியிருக்கிறது. சங்கத்திலே வருஷா வருஷம் நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அது சங்கத்தின் கணக் கிலே இருக்கிறது.

THIRU K. VINAYAKAM: Whereas the Co-operative Societies Act as it is today is found to be defective and has got loopholes, taking advantage of which people are tempted to commit